# புலிகள் பிரமுகர் திலகர் - சந்திரிகா டென்மார்க்கில் திடீர் சந்திப்பு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 01 இதழ் 33
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-3-1995

[கோபன்ஹேகன்)
ஸ்ரீ லங்கா ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகரை திடீரென சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்-
டென்மார்க்கில் சமூக வளர்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சென்ற ஜனதிபதி சந்திரிகா, மாநாட்டைவிட்டு

(4ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் குழு நாளை யாழ். வருகை

(கொழும்பு)
பிரிட்டனின் உதவி வழங்கும் நிறுவனமொன்றின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.
பிரிட்டனின் வெளிநாடுகளுக்கான அபிவிருத்தி புகாமையக பிரதிநிதிகளே யாழ்ப்பாணம் வரவுள்ளார்

(4ம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகளுக்கு இடையில் நம்பிக்கையின்மை நிலவுகிறது

## - பி. பி. ஸி.க்கு சந்திரிகா தெரிவிப்பு -

[லண்டன்]
''ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையுல் பெருமளவு நம்பிக்கையின்மை நிலவுகின்றது'' ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்று பி. பி. சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்,

டென்மார்க் தலைநகரான கோபன்ஹேகனில் நடை பெற்ற சமூக மேம்பாட்டு மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் அவர் லண்டன் சென்றிருந்தார். அப்போதே அவர் லண்டன் பி. பி. சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஸ்ரீலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இப்போதைய உறவு நிலை பற்றி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரசனைக்கு பேச்சு

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆதரவாளர் வவுனியாவில் கைது

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாகிய ஆறு பொது மக்கள் வவுனியா தடை முகாமில் சிறிலங்கா ராணுவத்தினரால் கடந்த 4ம், 7ம் திகதிகளில் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது மோதல் நிறுத்த மீறல் சம்பவங்களாகும் என தெரிவிக்கப்படுகிறது.

4-ம் திகதி கைதானோர் வரு

(4-ம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்னைக்கு

## தீர்வுத் திட்டம் எதனையும் இ.தொ.கா. சமர்ப்பிக்காது!

### தொண்டா கூறுகிறார்

(கொழும்பு)
இனப் பிரச்னைத் தீர்வு குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இ தொ.கா. எதுவிதத் தீர்வுத் திட்டத்தையும் சமர்ப்பிக்கமாட்டாது என அதன் தலைவரும், அமைச்சருமான திரு.எஸ் தொண்டமான் கூறியுள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

திரு.தொண்டமான் மேலும் கூறுகையில்: வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பது தற்போது தாமதமாகிவிட்டது என இ. தொ. கா. கருதுகிறது. ஐ. தே. க.வின் ஆட்சிக் காலத்தில் நான் இரு தடவைகள் ஏமாற்றம் அடைந்துள்ளேன்.

(4ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் வாசுவுக்கு கடிதம்

[யாழ்ப்பாணம்]
உண்ணாவிரதமிருக்கும் சிங்கள யுத்தக் கைதிகள் யாழ்ப்பாண அரச அதிபர் ஊடாக திரு.வாசுதேவ நாணயக்காராவுக்கு கடிதமொன்றை அனுப்ப முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து14 வது நாளாக உண்ணாவிரதம் இருந்துவரும் தமது விடயத்தில் கடந்த புதன்கிழமை வாசுதேவநாணயக்கார தலையிட்டமையினாலே தொடர்ந்து நீர்அருந்துவதாக தெரிவித்த யுத்தக் கைதிகள் மேலதமாக வாசுதேவ நாணயக்காரவிடம் இருந்து நம்பிக்கை தரக்கூடிய எந்தத்

(4ம் பக்கம் பார்க்க)

### முழுநேர படகு சேவை

(யாழ்ப்பாணம்)
புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 16, 17. 18 (வியாழன், வெள்ளி; சனி) ஆகிய திகதிகளில் கிளாளி படகுசேவை. முழுநேரமும் நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பூநகரி முகாம் விடயத்தில் அரசு மிக தெளிவாக உள்ளது

### பாதுகாப்பு அமைச்சு செயலர்

(கொழும்பு)
பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது என்பதில அரசு மிகத் தெளிவாக உள்ளது. தேசியப் பாதுகாப்பைக் கருதி இந்த முகாம் அகற்றப்படமாட்டாது என்பதை மீண்டும் கூற விரும்புகிறேன்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலர் சந்திரானந்த டி சில்வா, 'சண்டே ரைம்ஸ்,க்குத் தெரி

(4ம் பக்கம் பார்கக)

### ஆயர் கெனத் பெர்னண்டோ இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)
அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னண்டோ இன்று யாழ்ப்பாணம் வருவார் என்று அறிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் படை கலைக்கப்படமாட்டாது

### — அமைச்சர் ரத்வத்த

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளித்து ஒரு தீர்வு எட்டப்படும்வரை தொண்டர்படை கலைக்கப்படமாட்டாதென பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்த இராணுவத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்னை தீர்வுக்காக சமாதான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்

(4ம் பக்கம் பார்க்க)

### சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள்

## அமைச்சர் பதவிகளை ராஜினமா செய்யுமாறு வாசு கோரிக்கை

(கொழும்பு)
அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாகத் தங்களது அமைச்சர் பதவிகளை ராஜினமாச் செய்யவேண்டும் என இரத்தினபுரி மாவட்ட எம். பி.யும், இக்கட்சியின் அரசியல் பிரிவு உறுப்பினருமான திரு.வாசுதேவ நாணயககாரா

(4-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ராவ் பதவி விலகி புதியதேர்தல்நடத்தவேண்டும்

## — எதிரணிகள் கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் இரு முக்கிய மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியுள்ளதால் பிரதமர் நரசிம்மராவ் பதவி விலக வேண்டுமென்றும் உடனடியாக இடைத்தேர்தலை நடாத்துமாறும் பாரதீய ஜனதா கட்சி கோரியுள்ளது.

பிரதமர் ராவ் தனது ஆட்சியை தொடர இனியும் அவருக்கு எவ்வித அரசியல் அதிகாரமோ, தார்மீகஉரிமையோ கிடையாது. பிரதமர் ராவின் அரசை மாற்றி அமைக்கும் புதிய தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என பி. ஜே. பி. ஆர்ப்பாட்டம் செய்யும் இவ்வேளையில் பிரதமர் ராவிற்கு தலைவலியாக ஜனதா தளமும் தனதுஎதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கிள்ளது.

மகாராஜ்ரா, குஜாரத்தில் ஆட்சியை இழந்ததை தொடர்ந்து காங்கிரஸ் நாட்டில் ஆட்சியைத் தொடரும் தகுதியை இழந்துவிட்டது முடமான ஒரு கட்சி தற்போது ஆட்சியில் உள்ளது ராவ் ஒருவாத்து அவர் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது நாட்டுக்கு நல்லதல்ல இடைக்கால தேர்தல் உடனடியாக நடாத்தப்படவேண்டுமென ஜனதா தள கட்சியின் அறிவிப்பாளர் திரு ஜெய்ப்பல்ரெட்டி கூறியுள்ளார்.

எனினும் எதிர்க்கட்சிகளின் இந்த எதிர்ப்புக்களுக்கு காங்கிரஸிடமிருந்து எதுவித கருத்தும் வரவில்லை. தனது படுதோல்வி குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ராவ் நேற்று தனது அமைச்சரவையை கூட்டினர் ராவின்தோல்விககு அவரது புதிய பொருளாதாரக் கொள்கையே மூலகாரணமென பரவலான கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இத்தோல்வியால் பிரதமர் ராவ் கட்சிக்குள்ளேயே பெரும் எதிர்ப்புக்களை சந்திக்கவேண்டிய நிலை தோன்றியுள்ளதாம். -சி

# அரசு- புலிகள் முரண்பாடு சமாதான முயற்சிக்கு பங்கம்

(கொழும்பு)

''ஜனாதிபதி சந்திரிகா அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கிடையில் தற்போது தோன்றியுள்ள முரண்பாடுகள் தற்போதைய சமரச முயற்சிகளைப் பாழாக்கிவிடுமோ என்ற எண்ணத்தோன்றுகின்றது''

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளியாகும் வாரத் தமிழ் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது. இப்பத்திரிகை இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்

''அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது

இம்மோதல் தவிர்ப்பு நிலை காரணமாக வடக்கு-கிழக்குப் பிரசேத மக்கள் ஓரளவு சுதந்திரமாக நடமாடித்திரிவதுடன் குண்டுவீச்சுக்கள் இராணுவக் கெடுபிடிகள் அச்சுறுத்தல்களின்றி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது

இத்தகைய அமைதி நிலை நீடித்து நாளடைவில் ஒரு பரிபூரண அமைதிநிலை ஏற்படவேண்டும் என்பதையே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றார்கள். இது தவிர நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சமாதானத்தின் தேவை, என்றுமில்லாதவாறு உணரப்பட்டு வருகின்றது. பல்வேறு அமைப்புகள் சமாதானக் கூட்டங்களையும் சமாதான பாதயாத்திரைகளையும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்திவருவதையும இன்று காண்கிறோம்.

எனவே இந்த நிலையில் அரசும் -விடுதலைப்புலிகளும் தமக்கிடையில் நடாத்தும் பேச்சுவார்த்தைகளை பரஸ்பர புரிந்துணர்வைக் கொண்டதாக உத்தியோகபூர்வ அணுகுமுறைக்கப்பாலும் நடத்த வேண்டும் ஆனல் அரசினல் மேற்கொள்ளப்படும் அரசியல் ரீதியிலான தற்போதையப் பேச்சுக்கள் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒரு அணுகுமுயையாகவே காணப்படுகின்றது

அரசியல், சமாதானப் பேச்சுக்கள் என்று அமர்ந்து கொள்ளும் பட்சத்தில் இருகரப்பினரும் ஒருவரை ஒருவர் அச்சுறுத்தும் பாணியிலான சூழ்நிலைகளுக்கு இடமளிக்காதவாறு தம்மை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

நாடுமுழுவதுமே இன்னுமொரு யுத்தம் ஏற்படுவதை முற்றிலுமாக நிராகரித்துள்ளது இந்த நிராகரிப்பையே ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் வெற்றிகள் புலப்படுத்துகின்றன. வடக்கு- கிழக்கு மக்கள்கூட போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் நிலைகுலைந்து, மீண்டும் தமது ஆகாயப் பிராந்தியத்தை போர் விமானங்கள் ஆக்கிரமிப்பதையும், புகலிடம் தேடி ஓடுவதையும் விரும்பமாட்டார்கள்.

இதேநேரம் விடுதலைப் புலி போராட்ட அமைப்பாகவே களும் ஒரு பலமிக்க ஆயுதப் (4ம் பக்கம் பார்க்க)

# தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சைகள் 1994

கீழ்க்காணும் திகதிகளில் குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகும்:

**27-03-1995 இல் தொடங்கும் பயிற்சி நெறிகள்**

1. கணக்கியல் உயர்தேசிய டிப்புளோமா II (H. N. D. A. II) (D 113 & D 126)
2. கணக்கீட்டுத் தொழிநுட்பவலருக்கான தேசிய தராதரப்பத்திரம் (NCAT) (C 90)
3. பயில்நிலை வரைஞருக்கான தேசிய தராதரப்பத்திரம் (D.A) (T 55)

**03-04-1995**

1. தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப்பத்திரம் (குடிசார் மின்சாரமும் இலத்திரனியலும், பொறியியல், கணிய அளவீடு) NCT- CE, EE, ME & QS) (E10, 12, 11 & 1?)
2. கணக்கியலிலான உயர் தேசிய டிப்புளோமா III (HNDA III) (D 114 & D-128)
3. ஆங்கிலத்தில் தேசிய டிப்புளோமா (NDE) (D119)

**24- 4-1995**

1. ஆங்கிலத்தில் தேசிய தராதரப்பத்திரம் (NCE) (C86)
2. வியாபாரக் கற்கைகளில் தேசிய டிப்புளோமா (NDBS) (D107)
3. கணக்கியல் உயர் தேசிய டிப்புளோமா I( (HNDA IV) (D118 & D129)
4. வணிகவியலிலான உயர் தேசிய டிப்புளோமா II, III (HNDC II & III) D 99 & D101)
5. வியாபாரக் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரம்-புதிய பாடத்திட்டம் [பொது நிர்வாகம்] (NCPA) (C87)
6, வியாபாரமும் நிதியிலுமான தேசிய டிப்புளோமா (NDBF) (D127)
7. தொழிற் பயிற்சிநெறிகள் -(வானொலி மற்றும் இலத்திரனியல், மோட்டார் வாகன வல்லுனர். மின்கம்பி இணைத்தல் 1 வருடம். திருக்கரர் பொறிவலர் 1 வருடம், வானொலி பேணல் 1 வருடம்) (Trade Courses) (REM II, AM I EWE, TRM & RS) (T25-T52)

**16-05-1995**

1. பொறிக் கைப்பணியாளர் தேசிய தராதரப் பத்திரம் நீர்க்குழாய் 1 வருடம், மரப்பொறியியக்க வல்லுனர் 1 வருடம், மின்னியலாளர் 2 வருடம், பொருத்து வல்லுனர் 2 வருடம்) (PL, WM, EWD, AM) NCECP) [E14 - E28)
2. வணிகவியலிலான உயர் தேசிய டிப்ளோமா 11 (1994ல் நடந்த புதிய பாடத்திட்டம்) (HNDC II) (New Syllabus)

பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெறுவது தொடர்பாக கல்லூரியில் குறித்த பகுதித் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995-03-14. (எ-4821)

## வரி விளம்பரம்

**ந. சுந்தரம்பிள்ளைக்கு கனடா நாடகப்பரிசு**

நோர்வே நாட்டு நாடகப் பரிசுடன், கனடா நாடகப் பரிசையும் பெற்ற அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் இங்கிலாந்துக் கதை. (சி-1414)

**வைத்தியம்**

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)

**மாதாந்த உதவிப்பணம்**

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கடந்த தை மாதக் கொடுப்பனவுகள் இப்பகுதி எல்லைக்குட்பட்ட தபால் அலுவலகங்களில் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. 154

**உற்சவம்**

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வடலியடைப்பு பாரத்தனை ஐயனர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 6ம் திகதி திங்கட்கிழமையன்று ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்துஉற்சவங்கள் நடை பெற்று 17ம் திகதியன்று ஐயப்பன் கதைபடிப்புடனும், திருக்கல்யாணத்துடன் உற்சவம் முடிவடையும். (72)

# இன்று

(கொழும்புத்துறை)

யாழ். அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் கோவிலில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று நடைபெறும் புதன்கிழமை காலை 7-20மணிக்குவசந்த மண்டபப்பூசையை அடுத்து காலை 8-00 மணிக்கு சிவபெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவார். -154

(கொழும்புத்துறை)

யாழ்- குருநகர் சென்ரேக் வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ந. சி. பங்சுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. -154

(யாழ்ப்பாணம்)

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி இல்லத் தடகள ஆட்ட விழா கல்லூரி மைதானத்தில் இன்று 15ம் திகதி புதன்கிழமை பி. ப. 1-30 மணிக்கு கல்லூரி அதிபர் மு பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

(கொழும்புத்துறை)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில்இன்று புதன்கிழமை காலை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் சங்கிராந்தி பூசை நடைபெறும். -154

(உடுவில்)

யாழ். பல்கலைக்கழக இராமநர்தன் நுண்கலைக்கழக வாத்தியத்துறை இணைப்பாளர் கலாஜோதி அ. நா. சோமாஸ்கந்த சர்மாவின் இருபதாம் நூற்றூண்டின் ஈழத்து இசை முன்னோடிகள்'' என்னும் நூல் வெளியீடு இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நுண்கலை பீடத்தில் கவின் கலை மன்றத்தலைவர் எஸ் சிவசிவா தலைமையில் நடைபெறும். - 109

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்/ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை வருடாந்த இல்ல வல்லுனர் போட்டி இன்று புதன் அதிபர் திரு. பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் பி. 1.30க்கு நடைபெறும். பிரதம விருந்தினராக இளைப்பாறிய யூனியன் கல்லூரி அதிபர் நா. கந்தசாமி கலந்து கொள்வார்

0 0 0

(உடுவில்)

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு அதிபர் வி. தனலிங்கம் தலைமையில் நடைபெறும். -109

0 0 0

(யாழ்ப்பாணம்)

புத்தூர் நவக்கிரி அ. மி த. க பாடசாலையின் வருடாந்தஇல்லதடகளப்போட்டி இன்று புதன்கிழமை பி. பகல் 1-30 மணியளவில் கல்லூரி அதிபர் செ. செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது பிரதம விருந்தினராக வலி-கிழக்கு பிரதேச அலுவலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மு பாலசிங்கம் கலந்துகொள்வார். -க

**பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை**

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் நினைவுப் பேருரையை 1995-05-08 ஆம் திகதி நடாத்த உத்தேசித்துள்ளோம்.

இந்த நினைவுப் பேருரையை வழங்க ஆர்வமுடையயர்கள் தங்களது சுய விபரங்களையும், பேருரையை வழங்க இருக்கும் மொழியையும் குறிப்பிட்டு 1995 - 03- 29 ஆம் திகதிக்கு முன் எம்முடன் கடிதம்மூலம்/ நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1995-03 14
(ஏ-4823)

மணிவாக்கு

ஏளனம் என்பது குறுகிய உள்ளத்திலிருந்து எழுகின்ற நச்சுப்புகையாகும்.

— டெனிசன்

# பாண்டிச்சேரிப் பாணியில் மலையக மக்களுக்கென மாநிலசபை அமையவேண்டும்

(கொழும்பு)

மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேசங்கள் ஒன்ருக இணைக்கப்பட்டு மாநில சபையொன்று அமைக்கப்பட வேண்டும். இந்த அமைப்புக்கு வெளியே மலையக மக்கள் ஆங்காங்கே செறிவாக வாழுகின்ற பிரதேசங்கள் இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி முறையிலேயே யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டு மாநில கவுன்ஸிலோடு இணைக்கப்பட வேண்டும்.

இந்த மாநிலசபையின் நிருவாக மொழியாக தமிழ் மொழி இருக்கவேண்டும், இவ்வாறு மலையக மக்கள் முன்னணி அரசியல் அமைபபுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின்முன் மேற்படி யோசனையை சமர்ப்பித்துள்ளதாக இக்கட்சியின் செயலாளர் திரு. பி ஏ. காதர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி திரு காதர் மேலும் தெரிவிக்கையில்: நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு மலையக மக்கள் முன்னணி தனது ஆலோசனைகளைக் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12ம்திகதி சமர்ப்பித்துவிட்டது.

''வெஸ்ட்மினிஸ்டர்'' முறையோ அல்லது விகிதாசார முறையோ சிறுபான்மையினருக்குப் போதிய அதிகாரத்தை வழங்கவில்லை. உதாரணமாக 1948ம் ஆண்டுக் காலப்பகுதியில் மலையக மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் ஏழுபேர் இருக்கும் போது தான் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனை யாராலும் தடுத்து நிறுத்தமுடியவில்லை. தமிழரசுக்கட்சி பலத்தோடு நாடாளுமன்றத்தில் இருந்தபோது தான் தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனையும் அவர்களால் தடுக்க முடியவில்லை

நாட்டில் மூன்றில்இரண்டு பகுதியினர் சிங்கள மக்கள். அதனுல்தான் அவர்களுக்கு சாதகமான சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றககூடியதாக இருந்தது. இதனைத் தடுக்கவே இரட்டைப் பெரும்பான்மை வழங்கப்படவேண்டும் என்று நாம் தற்போது சமர்ப்பித்த யோசனையில் கோரியுள்ளோம்

இதன்படி நாடாளுமன்றத்தில் சிறுபான்மை மக்கள் தொடர்பாக எடுக்கும் எந்த ஒரு முடிவும் அந்த மக்களின் பிரதிநிதிகளின் சம்மதத்தை பெருமல் நிறைவேற்ற முடியாது. இது கனடாவில் பரிசீலிக்கப்பட்ட ஒரு முறையாகும். சிறுபான்மை மக்களின் நலனுக்காக இந்தியாவில் இருப்பது போன்று ஒரு தேசியக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும என்றும் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மலையக மக்களுக்குப் பாதகமான பிரஜாவுரிமைச்சட்டங்கள் நீக்கப்படவேண்டும் அவர்கள் இந்திய வம்சாவழியினர் என்ற சொற்பதம் நீக்கப்பட்டு மலையகத் தமிழர் என்று அழைக்கப்படவேண்டும். கனடாவில் இருப்பது போன்ற முறை இங்குள்ள சிறுபான்மை மக்களுக்கும் வேண்டும். இதன்படி அவர்கள் வாழ்கின்ற மண்ணிலிருந்து அவர்களை அகற்ற முடியாது. யாப்பை சட்டரீதியாக சரிபார்க்கின்ற முறை அமுல்படுத்தநபடவேண்டுமென்று பி. ஏ. காதர் தெரிவித்தார்.

விசி

# நமது நோக்கு

## இராணுவ ஆதிக்கமா?

தமிழ் மக்களின் அன்ருடப் பிரச்னைகள் தற்போது தீர்த்துவைக்கமுடியாதவை எனச் சந்திரிகா தேசியத் தலைவருக்கு எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார்.

பூநகரி முகாம் அகற்றுதல, மீன்பிடித் தடையை அகற்றுதல், பொருளாதாரத் தடையை நீக்குதல் போன்றவை நிறைவேற்றப்பட்டால் இராணுவ ரீதியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் காரணம் வேறு காட்டியுள்ளார்.

உண்மை நிலையை உணர வைத்திருப்பது பற்றி நாம் மகிழ்ச்சியடையவேண்டும்.

ஏனெனில் — இலங்கையில் ஆட்சி அதிகாரம் செலுத்துவது இராணுவமா அரசா என்ற சந்தேகம் அவராலேயே நீக்கப்பட்டிருக்கிறது.

இராணுவத்தை வழிக்குக் கொண்டுவருவதற்காகப் பதவி மாற்றங்கள், ஊழல் விசாரணைகள், காணமற்போவோர் பற்றிய ஆணைக்குழுக்கள் போன்றவை பூரண வெற்றி அளிக்கவில்லை எனத்தான் மக்கள் கருதுவார்கள்.

இலங்கையில் ஒரு இனம் புறக்கணிக்கப்பட்டதால் உள்நாட்டு யுத்தம் மூண்டது என டென்மார்க் தலைநகரில் உலகத் தலைவர்கள் முன் உரை நிகழ்த்திய ஜனுதிபதிக்கு, உள்நாட்டில் இந்த நிலை ஏற்பட்டது வேதனைக்குரியது தான்.

புறக்கணிப்பு ஏன், எப்படி ஏற்பட்டது? அதற்குக் காரணமானவர்கள் யார்? இதையெல்லாம் விசாரித்து நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவரே புறக்கணிக்கப்படும் நிலைக்கு ஆளாகிவிட்டாரா?

சமத்துவம், நீதி, நியாயம், ஜனநாயக ஆட்சி முறை என வாயாரக் கூறிவிட்டு, இனவாத, இராணுவச் சக்தி நிலைக்கு அடிமையாகிவிட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தாமதப்படுவது இலங்கையின் சாபக்கேடே!

தமிழினம் இதனை உணர்ந்து தனது பாதுகாப்பைத் தானே உறுதி செய்யவேண்டியது அவசியமாகும். பிறரது தயவில் வாழாது தனது வாழ்வைத் தானே தீர்மானிக்கவேண்டியது அவசியம்!

# பேச்சுக்கள் தோல்வியுற்ருல் இராணுவ தீர்வை மேற்கொள்வோம்

— நாடாளுமன்றில் அமைச்சர் ரத்வத்தை

(கொழும்பு)

''பேச்சுவார்தைதை மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிருேம். அந்த முயற்சி தோல்வியடைந்தால் மாத்திரமே இராணுவ ரீதியாக அணுகுவோம். அதற்கு ஏற்ற வகையில் முன்னெச்சரிக்கையாக இராணுவத்தை தயார் நிலையில் வைத்துள்ளோம்''

மின்சக்தி நீர்ப்பாசன அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தை நாடாளுமன்றில் அண்மையில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: சமாதான பேச்சுவார்த்தையின் போது எந்தவித தவறும் எற்பட இடமளிக்கமாட்டோம். பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்ருேம். அவ்வாறு முடியாமல் போனுல் இராணுப அணுகுமுறை மூலமாகிலும் பிரச்னையை தீர்ப்போம். பிரச்சனையை நீண்ட காலத்திற்கு இழுத்தடிக்க விடமாட்டோம்.

பேச்சுவார்த்தையை நடாத்துகின்ற அதேவேளை எந்த நிலைமையையும் சமாளிக்கும் விதத்தில் முன்னெச்சரிக்கையாகவும் இருந்து வருகின்ருேம்.

உதாசீனமாக இருந்துவிட்டு பின்னர் ஏற்படவுள்ள விளைவுகளை எதிர்நோக்க நாம் தயாராக இல்லை என்றும் தெரிவித்தார்.

க-சி

# இராசி பலன்

15-3-1995

புதன்கிழமை

(தமிழுக்கு பங்குனி-01

திரயோதசி முற்பகல் 9-18 வரை, மகம் முன்னிரவு 9-53 வரை, சித்தாமிர்தயோகம், இராகுகாலம் நண்பகல் 12-2 முதல் 1-51 வரை, சுபவேளை மாலை 4-51 முதல் 6-21வரை,

மேடம்: முட்டி மோதல், பணமுடை, அமைதியின்மை.

இடபம்; குறும்புத் தனம், குடும்பப்பகை, அகாலஉணவு.

மிதுனம்: சாது தரிசனம், பயண அனுகூலம், மனத்திருப்தி.

கடகம்: வயோதிபர் துன்பம், கடினவாக்கு, அலைச்சல்.

சிங்கம்: வசதியான இடமாற்றம், பணியாள்பெருமை. பணவரவு.

கன்னி: பிறர் கண்டனம், தொழில்பங்கம், கடினவேலை.

துலாம்: துணிச்சலான செயல், பதவி உயர்வு, தெய்வீகப்பணி.

விருச்சிகம்: உறவினர் சங்கமம், விருந்துபசாரம், உல்லாசம்.

தனுசு: தாழ்ந்தநிலை, ஆணவப்பேச்சு, குடும்ப செலவு.

மகரம்; குடும்பபிரிவு, சகோதரபகை, மனச்சங்கடம்.

கும்பம்: நினைத்தது நிறைவேறல், குடும்ப சுகம், தானதர்மம்.

மீனம்: அதிகாரிகள் ஆதரவு, புதிய உறவு, தயாளசிந்தை.

— ஜோஸ்யர்

# புலிகள் அழைத்தால் பேச்சுக்கு வருவோம்

— அஷ்ரப் கூறுகிருர்

[கொழும்பு]

பேச்சுவார்தததைகக்கு வருமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் அழைப்பு விடுத்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காக்கிரஸ் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளுமென அக்கட்சியின் தலைவரும துறைமுகங்கள் கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், வடக்கு—கிழக்கில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்திருப்பதானது சமாதானம் குறித்த நோக்கில் முன்னேற்றம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

கடந்த ஆண்டுமே மாதம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதாக கடிதம் ஒன்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பப்பட்டதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

க-சி

## புலதும் பத்தும்

### பிரசங்கப் பணி

மாவிட்டபுரம், கீரிமலை நினைவு வந்துவிட்டது சுழிபுரத்தைச் சேர்ந்த க. இரத்தினவேல் அவர்களுக்கு அது மாத்திரமல்ல - அங்கு நடைபெற்ற கந்தப்புராணப்படிப்பையும் நினைவுபடுத்திக் கடிதம் எழுதியுள்ளார்.

குறிப்பாக...... தெல்லிப்பழையைச் சேர்ந்த பண்டிதர் சங்கரப்பிள்ளை அங்கு கந்தப்புராணப்படிப்பை ஊக்குவித்ததோடு பயன் சொல்லி வந்தார். தலைமையாசிரியராக இருந்து கல்விப்பணி ஆற்றிய பண்டிதர் கோவில்கள் பலவற்றிற்கும் சென்றும் பிரசங்கம பணியும் செய்தவர்.

நல்ல பல சமயக் கருத்துக்களை நகைச்சுவையோடு, சிறுவரும் விரும்பிக் கேட்கும் சிறுகதைகளோடு பரப்பி வந்தவர். இத்தகைய சமயப்பணி ஆற்றிய பண்டிதர் பணி நினைவு கூரப்படவேண்டாமா எனவும் எழுதியுள்ளார்.

— மயூரன்

### விசேட அபிஷேகம்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் பங்குனி மாதச் சங்கிராதி விசேட அபிஷேகம் பூசை, வழிபாடு, ஆராதனைகள் இன்று புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது.

154

காடுதனை வளர்த்திடுவோம்
சூடுதனை தணித்திடுவோம்

### வானெலிதிருத்தும் பயிற்சி நெறி

(நெல்லியடி)

யாழ். கல்வித்திணைக்கள வலயம் 2-ன் முறைசாராக்கல்விப் பிரிவினுல் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் வானெலி திருத்துல பயிற்சி நெறிகளை அடுத்த மாதம் 2-ம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பயில விரும்பும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் இம்மாதம் 28ம் திகதிக்கு முன் பாடசாலை அதிபருக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

-160

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாளர் நிலையத்தினுல் நடாத்தப்படும் பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் (வர்த்தக வங்கிக்கு அருகாமையில்) அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அப்பரீட்சையில் தோற்றும் சகலரும் இதில் தவருது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளபபடுகின்றனர்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–03-15**

புதன் இரவு

08.01 - குயிலோசை ஒயிலாட்டம்
08.20 - ஏர்முனை- நிகழ்ச்சியில் ''எமக்குத்தேவையான தொழில் நுட்பம்''விவாத அரங்கம்
08.30 - செய்திகள்
08.40 - நாடகம்-கருணை ரவி எழுதிய 'மண்ணோடு மாப்பிள்ளை

**1995-03-16**

வியாழன் காலை

07.0? - மாவீரவணக்கம்
07 15 - விடுதலை கீதங்கள்
07.30 - செய்திகள்
07 35 - பத்திரிகைச்செய்திகள்
07.40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-15**

புதன் மாலை

05.01 - சிந்தனைச் சிதறல்
05.02 - எழுச்சிகீதம்
05 10 - புதியவை
05.15 - படப்பாடல்கள்
05 30 - அறிவூற்று
06,00 - சிந்தனைக்குச் சில வினுடிகள்
06.02 - உங்கள் தெரிவு
06.15 - விளையாட்டுச் செய்திகள்
06.20 - உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
06 30 - மாலை நிகழ்ச்சிகள் யாவும்நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

''வார்த்தை தவருத இறைவா, நீர் என்னை மீட்டருள்வீர்''
(சங். 30:5)

'பார்வை பெறவேண்டும்' என்ற குருடனுக்குப் பார்வை அளித்தார் யேசு. பாவிகளை மீட்க வந்தவர், தம்பணியில் தவருது செயல்பட்டார். எனது மீட்பே, தனது நோக்கு என வந்தவருக்கு, எனது வேண்டுகோள் எம்மாத்திரம்? நாம் அவரை நோக்கினுல், அவர் எம்மை நோக்குவார். வார்த்தை தவருதவர், வல்லவர்.

— தா. மைதிலி

# போருக்கு ஆயத்தமாகும்படி படையினர்க்கு நாம் கூறவில்லை

## சந்திரிகா கூறுகிறார்

(லண்டன்)

படையினர் யுத்தம் குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் யுத்தத்துக்கு ஆயத்தமாகும் படி படையினர்க்கு நாம் உத்தரவிடவில்லை

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இவ்வாறு கூறினார்.

அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் அமைச்சர் போருக்கு ஆயத்தமாக இருக்குமாறு கூறியுள்ளார். இக்கூற்று சமாதான முயற்சிக்கு குந்தகமானது அல்லவா என பி. பி. சி. செய்தியாளர் திருமதி சந்திரிகாவை கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது:-

''இல்லை அப்படியான கருத்துடன் அவர் கூறவில்லை. நாம் சமாதான முயற்சியில் செல்கிறோம். அதற்காக இயன்றளவு பிரயாசை எடுக்கிறோம். இதில் சிக்கல் நிலை ஏற்படுமாயின் படையினர் தயாராக இருக்க வேண்டுமென்ற பொருள் படவே கூறினர். ஆனால் அவர் போருக்கு தயாராகுமாறு படையினர்க்கு கூறவில்லை என திருமதி சந்திரிகா பதில் அளித்தார். கே-இ

### தொண்டர் படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் புதிதாக படைக்கு ஆட்களைச் சேர்த்து இராணுவத்தை வலுப்படுத்துவதென அரசு கடந்த வாரம் தீர்மானித்திருப்பதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,—

இராணுவத்தில் இளைஞர்கள் தரத்தில் இணையுமாறு அரசு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இவர்கள் மூலம் 1990ல் இருந்து படைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்ப அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் இராணுவத்திற்கு நான்கு நாட்கள் ஆட்சேர்ப்பு நடைபெற்றது. இதில் 2000 பேர் வரை தெரிவு செய்யப்பட்டனர். இராணுவத்தினருக்கு இவ்வாறு ஆட்களை சேர்ப்பது சமாதான முயற்சிகளை பாதிக்காதெனவும் படை வட்டாரங்கள் கூறியுள்ளன. —சி-இ

### அரசு-புலிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வருகின்றது. அவர்களின் பலத்தை அரசு நன்கு எடைபோட்ட நிலையிலேயே, போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை செய்துகொண்டது. இந்த நிலையில் யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்பட்டால் விடுதலைப் புலிகளும் முழுஅளவில் இராணுவ நடவடிக்கைகளில் குதிப்பார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

எனவே கூடியவரை இரு தரப்பினரும் சூடான வாதப் பிரதிவாதங்களுக்கோ, அல்லது கடுமையான கருத்துப் பரிமாற்றங்களுக்கோ இடமளிப்பதை தவிர்த்து ஓர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். இதையே நாடுமுழுவதுமல்ல, சர்வதேச உலகமுமே எதிர்பார்க்கின்றது. வி-சி

### சமசமாஜக் கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோரியுள்ளார்.

கடந்த வாரம் அரசியல் பிரிவுக் கூட்டம் நடைபெற்ற போதே திரு.வாசுதேவ நாணயக்காரா இந்த அவசர வேண்டுகோளை விடுத்தார். பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது, தன்னிச்சையாக நடப்பதாகவும், அரசு மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை சிதைந்து விட்டதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எனினும் இவரது கோரிக்கையை, கட்சியின் அரசியல் பிரிவு ஏற்க மறுத்துவிட்டதாம். இவரது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கட்சி உறுப்பினரும், பிரதி அமைச்சருமான திரு. பற்றி வீரக்கோன் கூறியுள்ளார்.

தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் நான்கிற்கு மேற்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளை வகிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சி-இ

# முன்னாள் அமைச்சர் ஹமீத் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட அமைச்சரும் ஐ. தே. கட்சியின் முக்கிய பிரமுகருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை அண்மையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது பதவியை இராஜினாமாச் செய்யுமாறு தாம் சிலரால் நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர் தேசியப்பட்டியல் மூலம் முஸ்லீம் ஒருவர் நாடாளுமன்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுவதை ஐ. தே. க.வின் சில உறுப்பினர்கள் விரும்பவில்லையென்றும் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கா இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்ததாகவும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க இப்பேச்சுவார்த்தையின் போது உடன் இருந்ததாகவும் அறியப்படுகிறது. க-சி

### பிரிட்டிஷ் குழு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள்.

நாளை 16-ந் திகதி யாழ்ப்பாணம் வரும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள புனரமைப்பு திட்டங்களைப் பார்த்து அவற்றுக்கான நிதி வழங்கல் குறித்த முடிவுகளை எடுப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. -ம-இ

### புலிகள் பிரமுகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறியபோது புலிகளின் சர்வதேச பேச்சாளர் லோறன்ஸ் திலகரை சந்தித்து கைகுலுக்கி உரையாடினார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப்பிரதிகளுக்கும் இடையே அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திகதியை புலிகள் குறிப்பிட வேண்டுமென திருமதி சந்திரிகா, திரு. திலகரிடம் கேட்டுக் கொண்டாராம்.

தமது அரசு தொடங்கியுள்ள சமாதானத்துக்கான நடவடிக்கைகளை புலிகள் தடை செய்ய விரும்புகிறார்களா என திருமதி சந்திரிகா அவரிடம் கேட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சமீபத்தில் பிரான்சின் தூதுவரை மத்தியஸ்தராக வைத்து அரசு நியமித்ததை புலிகள் நிராகரித்ததற்கு காரணம், அந்த அதிகாரி ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர் என்ற முறையினால்தான் என திலகர் அங்கு தெரிவித்தார்.

திருமதி சந்திரிகாவுக்கும் திரு. திலகருக்குமிடையிலான இச்சந்திப்பு சுமார் 30 நிமிட நேரம் இடம் பெற்றது.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகாவுடன் சில அதிகாரிகளும் உடன் இருந்ததாகவும் திரு. திலகருடன் வேறு சில விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்னைகளை தீர்க்க வேண்டியதன் அவசியம், தேக்க நிலையிலிருக்கும் அடுத்த கட்டப்பேச்சுக்கள் குறித்தும் இந்த சந்திப்பில் ஆராயப் பட்டதாகவும் கூறப்படுகிறது. (கே-சி-இ)

### ஆயர் கெனத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவருடன் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, சாள்ஸ் அபசேகர ஆகியோரும் வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தற்போது உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை பார்வையிடவே, ஆயர் கெனத் பெர்னாண்டோ குழுவினர் இங்கு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. ம-இ

### பூநாரி முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார். அவர் இது பற்றி மேலும் கூறுகையில்:

இராணுவத்தினரின்தற்போதைய நிலைப்பாடு குறித்துக் கருத்துக் கூறமுடியாதுள்ளது. எனினும் அண்மையில் அமைச்சர் ரத்வத்தையுடன் சேர்ந்து கிழக்கில்மேற்கொண்டவிஜயத்தின்மூலம்,அவர் கவலையடைந்திருப்பதுபோல் தெரியவில்லை. மேலும் எதுவித பிரச்னை குறித்தும் அவர்கள் எதுவித முறைப்பாடும் செய்யவில்லை.

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து சிவில் நிர்வாகத்தை மேற்கொள்வது பற்றித் தற்போது எதுவும் கூறமுடியாதுள்ளது.

மோதல் தவிர்ப்பு உள்ள இவ்வேளையில், கிழக்கில் சில மீறல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இவை சாதாரண மட்டத்தில் நடைபெற்றவையே. ஏதாவது சம்பவங்கள் நடைபெற்றால், அவற்றைச் சாதாரண மட்டத்திலேயே அவர்கள் பேசித் தீர்க்க வேண்டும்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பைப் பயன்படுத்தி, பதுங்குகுழிகளை அமைதது வருவதாகக் குறிப்பிடுவதிலஎதுவித உண்மையும் இல்லைஇவ்வாறுஎதுவும் நடைபெற்றதாச இராணுவத்தினரும் கூறவில்லை.

சமாதானப் பேச்சுக்கள் தோல்வி அடைந்தாலும் என படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்களா? எனக் கேட்டபோது, நாம் ஏன எதிர்மாறாகச் சிந்திக்க வேண்டும்? இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டியது இராணுவத்தினரின் வழமையான கடமை. இதை விடுத்து எல்லோரும் சமாதானம பற்றி நல்லதையே சிந்திக்க வேண்டும் என்றார்.

யாழ்ப்பாண மக்கள் தற்போது துன்பத்திலிருந்து விடுபட்டுள்ளார்கள். தற்போது அவர்கள் பயபபடுவதில்லை. சமாதானப் பேச்சுக்கு முன் அவர்கள் தினமும் அச்சத்துடனும் கவலையுடனும்வாழ்ந்தார்கள்.ஆனால்தற்போதுஅவர்கள் சமாதான முயற்சிகளால் பல வருடகால யுத்தத்தின் பின்னர் சந்தோஷமாக உள்ளார்கள். பல வருடங்களின் பின்னர் இப்போது நம்பிக்கை பிறந்துள்ளது. சமாதானம் ஏற்பட்டு, நிலையான வாழ்வு அமையும் எனவும் நம்பிக்கை பிறந்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் வெற்றி பெறுமா? எனக் கேட்கப்பட்டபோது, எமக்கு நம்பிக்கை தேவை. இவ்வளவு கால யுத்தத்தின் பின்னர் இதைவிட வேறு சிறந்த மாற்று வழியில்லை. சமாதானப் பேச்சுக்கள் இங்கும், யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும். இராணுவத்தினரிடமும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது எனவும் கூறினார். சா-இ

# யாழ். இலங்கை வங்கிக்கு கணனி பாவிக்க அனுமதி

(கொழும்பு)

யாழ்ப்பாண இலங்கை வங்கியின் மேற்தரக்கிளையின் பணிகளை நவீன மயப்படுத்துவதற்காக கணனிகளை பயன்படுத்துவதற்கான அனுமதியை இலங்கை வங்கியின் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் வழங்கியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு அமைவாக கணனிகளை பயன்படுத்தி வங்கி கணக்குகளை செயற்படுத்தவும் அவற்றிற்கான கணனிகளை கொழும்பிலிருந்து எடுத்து வரவும் வங்கி நிர்வாகம் முயற்சிகளை எடுத்து வருகிறது.

இந்த நடவடிக்கையினால் வங்கிப் பணிகள் இலகுவாக்கப்படுவதுடன் குறைந்த ஊழியர்களுடன் பணிகளை செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (கே-இ)

### இராணுவ சிப்பாய் தற்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவ முகாம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

வாழைச்சேனை புலிபாய்ந்தகல் இராணுவ முகாமில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. தற்கொலை செய்துகொண்ட இராணுவ சிப்பாய் இரண்டாம் லெப்டினன்ட் ஆவார்.

### அரசு-புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை மூலம் ஓர் இணக்கம் காணும் நோக்கத்தோடு பேச நான் குறிக்கும் விஷயத்தில் விடுதலைப்புலிகள் இணங்க மறுத்து நிற்கிறார்கள் என்று அவர்கள் மீது திருமதி சந்திரிகா குற்றம் சுமத்தியுள்ளார்,

பேச்சு வார்த்தை தோல்வி காணும் பட்சத்தில் அரச படைகள் மீது இராணுவ வெற்றி பெறும் நோக்கத்தோடு அமைதி முயற்சியை புலிகள் தமக்கேற்ற வகையில் கடைப்பிடிப்பதாகவும் அவர் புலிகளை சாடியுள்ளார்.

இதேவேளையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேசப் பிரிவு பொறுப்பாளர் லோறன்ஸ் திலகருடன் நடத்திய சந்திப்பு பற்றி பி. பி.சி. ஜனாதிபதி சந்திரிகாவிடம் வினவிய போது அவர் கூறியதாவது:

உண்மையில் இந்தச் சந்திப்பு திடீரென நடைபெற்ற ஒன்றே. முன்னரே ஏற்பாடு செய்த சந்திப்பல்ல. அங்கு மிகவும் சிநேகபூர்வ முறையில் நாம பேசினோம். இந்தச் சந்திப்பிள பேசியவற்றைப் பார்க்கும் போது எதிர்காலம் குறித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றார். (இ)

### யாழ். ஆஸ்பத்திரிக்கு 'பிக்கப்' வாகனம்

(கொழும்பு)

யாழ்ப்பாண பொது மருத்துவ மனையின் பாவனைக்கு மகளிர் விவகார போதனா வைத்தியசாலை அமைச்சு புதிய 'பிக்கப்' வாகனமொன்றை வழங்கியுள்ளது.

இந்த வாகனத்தை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு பணிப்பாளர் முயற்சி செய்துள்ளனர். (கே-இ)

### புலிகள் ஆதரவாளர்

1ம் பக்கத்தொடர்ச்சி)

மாறு, சுரேந்திரகுமார், தனபாலசிங்கம்,அற்புதராசா, அரியராசா.

7-ம்திகதி கைதானோர் வருமாறு: நிஸ்கேசன், தர்மலிங்கம்

### உண்ணாவிரதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகவலும் கிடைக்கவில்லை என்றும் கவலை வெளியிட்டுள்ளார்.

எனவேதான் யாழ்ப்பாண அரச அதிபர் ஊடாக வாசுதேவ நாணயக்காராவுக்கு தமது நிலைமையை விளக்கி கடிதம் எழுதப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர் இக்கடிதம் நேற்றிரவு இன்று காலை யாழ்ப்பாண அரச அதிபரால் கொழும்பிற்கு அனுப்படும் என்று யுத்தக் கைதிகள் தெரிவித்தனர். -ம-இ

### இனப்பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது இப்பிரச்னைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தேன். தற்போதுகூட பொ. ச. மு. அரசு இவ்விடயம் குறித்து இதுவரை எனது உதவியைக் கோரவில்லை.

இப்பிரச்னைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும் என நினைப்பதற்குக் கால தாமதமாகிவிட்டது, ஜனாதிபதி சந்திரிகா நல்ல வேலை செய்வதால் பொ.ச.மு. அரசுக்கு எமது ஆதரவு தேவை இல்லையென நான் நினைக்கின்றேன். நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

முன்னர் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு நான் மேற்கொண்ட முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா நன்கு அறிந்துள்ளார். நான் தனியாகவும், ஜனாப் அஷ்ரப்புடனும் இணைந்து, இப்பிரச்னைகு நிரந்தரத் தீர்வுக்கான தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ளேன். எனினும் இது வரை இந்த அரசு இது குறித்து என்னை அணுகவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா இவ்விடயத்தில் உறுதியான ஒரு தீர்வை வெகுவிரைவில் மேற கொள்வார் என நினைக்கின்றேன்.

சமாதான முயற்சி என்பது சிக்கல் வாய்ந்தது. விடுதலைப் புலிகளும், அரசும் இந்த விடயத்தில்பெருமளவுசாதிக்க வேண்டியுள்ளதுடன், விசுவாசமாகவும் நடந்துகொள்ள வேண்டும். இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் சகல கட்சிகளும் அக்கறையாக இருக்க வேண்டும். தற்போது அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு, பெரிய சம்பவங்கள் எதுவுமில்லாது தொடர்வது திருப்தி தருகிறது.

என்ன இருந்தாலும், இந்த சமாதான முயற்சியை அரசும் புலிகளும் தொடரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-